S. M. FERNANDO
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண்வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளை சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம். பேர்னாண்டோ
580 ஆஸ்பத்திரி வீதி.
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 07 திங்கட்கிழமை (21 06 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 205

# புலிகளின் நிபந்தனையை அரசாங்கம் தெற்கு மக்களுக்குத் திரித்துக் கூறுகிறது!

## யுத்தத்தைத் தொடர்வதற்காகவே எரிபொருள், பற்றரி கேட்கிறார்களாம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளை விடுவிப்பதானால், அரசாங்கம் தமிழ் மக்கள் மீது திணித்துள்ள பொருளாதாரத் தடையை நீக்கவேண்டும் என்று விடுதலைப் புலிகள் விதித்த நிபந்தனையை —

அரசாங்க பொதுசன தொடர்பு சாதனங்கள் தென்னிலங்கை மக்களுக்குத் திரித்துக் கூறியுள்ளன.

எரிபொருள், பற்றரி ஆகிய பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர் என்றும் —

யுத்தத்தைத் தொடர்வதற்காகவே அவர்கள் இந்த நிபந்தனையை விதித்திருப்பதாகவும் — அரசின் தொலைக்காட்சி சேவையான ரூபவாகினி நேற்று இரவு தனது செய்தி ஒளிபரப்பில் தெரிவித்தது.

தனது பாதுகாப்பில் உள்ள 39 யுத்தக் கைதிகளையும் விடுதலை செய்வதற்கு விடுதலைப் புலிகள் புதிய நிபந்தனைகளை விதித்துள்ளனர். —

விடுதலைப் புலிகள் விதித்துள்ள ஆச்சரியம் தரும் நிபந்தனைகளில் எரிபொருள் மற்றும் பற்றரிகளை எடுத்துச் செல்வதற்கான தடையை நீக்குமாறு கேட்டிருப்பதாக "லங்கா புவத்" தெரிவிக்கிறது—

பாதுகாப்புப் படைகளுக்கு எதிரான போரைத் தொடர்வதற்கே விடுதலைப் புலிகளுக்கு எரிபொருளும், பற்றரிகளும் தேவைப்படும் —

39 யுத்தக் கைதிகளையும் பார்ப்பதற்காகச் சென்ற உறவினர்கள் இன்னமும் யாழ்ப்பாணத்திலேயே — தங்கியுள்ளார்கள் என்று ரூபவாகினிச் செய்தியில் கூறப்பட்டது.

இந்தச் செய்தி ஒளிபரப்பில் யுத்தக் கைதிகள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

விடுதலைப் புலிகள் விதித்திருக்கும் நிபந்தனை நியாயமற்றது என்றும் நிறைவேற்ற முடியாத ஒன்று எனவும் சிங்கள

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊாலிப் படகு இன்றும் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஊாலி - பூநகரிப் படகுச் சேவை இன்று திங்கட்கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (ஒ)

## நரசிம்மராவ் அரசு 2 வருடம் பூர்த்தி

புதுடில்லி, ஜூன் 21

பிரதமர் நரசிம்மராவ் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் அரசு பதவிக்கு வந்து இன்றுடன் திங்கள் 2 ஆண்டுகள் பூர்த்தியடைகின்றன.

இதனை ஒட்டி மாநிலங்கள் எங்கும் காங்கிரஸ் கட்சி பொதுக்கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுகிறது. (இ எ)

## வீரசேகரா நேற்று கொழும்பு திரும்பினார்

விடுதலைப் புலிகளின் காவலில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த ஜனாதிபதியின் தூதராக நேற்று முன்தினம் யாழ் வந்த பிரிகேடியர் வீரசேகரா நேற்று முற்பகல் இங்கிருந்து புறப்பட்டுச் சென்றார்.

அவருடன் கொழும்பில் இருந்து வந்த யாழ் அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரும் நேற்று அவருடன் மீண்டும் கொழும்பு சென்றார்.

பருத்தித்துறையில் இருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்குச் சென்று பலாலியில் இருந்து விமானம் மூலம் அவர்கள் கொழும்பு செல்ல ஏற்பாடாகியிருந்தது. (இ-5-3)

## வீரப்பனின் மற்றும் 2 சகாக்கள் கைது

புதுடில்லி, ஜூன் 21

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் மற்றும் இரு நெருங்கிய சகாக்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

கர்நாடக சிறப்புக் காவல் படையினர் இவர்களைக் கைது செய்தனர்.

கர்நாடக தமிழ்நாடு எல்லையின் காட்டுப்பகுதியில் துப்பாக்கிச் சூடு பரிமாற்றத்துக்குப் பிறகு இவர்கள் பிடிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் காண்டா காடுகளில் வீரப்பனின் 13 உதவியாளர்களை கைது செய்தனர் என்பது தெரிந்ததே.

வீரப்பனைத் தேடிப் பிடிக்கும் பணியில் கர்நாடக — தமிழ்நாடு சிறப்புப் படையினர், எல்லைப் பாதுகாப்புப் படையினருடன் இணைந்து தீவிரப்படுத்தி உள்ளனர். (இ-162)

## மேலும் 2 தினங்கள் நீராகாரம் அருந்த யுத்த கைதிகள் முடிவு

விடுதலைப் புலிகளின் காவலில் உண்ணாவிரதம் இருந்து வரும் சிங்கள யுத்தக் கைதிகள் மேலும் இரண்டு தினங்களுக்கு நீராகாரம் அருந்தி தமது உண்ணாவிரதத்தைத் தொடர்வதற்கு தீர்மானித்திருப்பதாக புலிகளின் குரல் வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

முதல் ஏழு தினங்களுக்கு மட்டுமே நீராகாரம் அருந்துவது என்றும் —

அதன் பின்னர் ஆகாரம் எதுவும் உட்கொள்ளாமல் உண்ணாவிரதத்தைத் தொடர்வது என்றும் யுத்தக் கைதிகள் முதலில் முடிவு செய்திருந்தனர்.

ஜனாதிபதியின் அனுமதியுடன் யாழ். வந்த பிரிகேடியர் வீரசேகரா, நேற்று முன்தினம் மேற்படி கைதிகளைச் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்தே மேலும் இரண்டு தினங்களுக்கு நீராகாரம் அருந்தி தமது உண்ணாவிரதத்தைத் தொடர அவர்கள் முடிவு செய்துள்ளனர் என்றும் —

இந்த இரண்டு தினங்களுக்குள்ளும் ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகளுடன் பேசி தமது விடுதலை தொடர்பாக சாதகமான நிலையை ஏற்படுத்த வேண்டும் என அவர்கள் கூறியுள்ளதாகவும் "புலிகளின் குரல்" மேலும் தெரிவித்தது. (உ 5)

## ரணில் இன்று புதுடில்லி விஜயம்:

# அரசியல் நிலைமை குறித்து ராவுடன் முக்கிய பேச்சுகள்

### தமிழர் பிரச்சினையும் ஆராயப்படும்

புதுடில்லி, ஜூன் 21

இன்று புதுடில்லிக்கு விஜயம் செய்யும் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா, இந்தியப் பிரதமர் நரசிம்மராவுடன் இலங்கை அரசியல் நிலை குறித்தும், தமிழர் பிரச்சினை குறித்தும் மற்றும் இலங்கை - இந்திய பொருளாதார ஒத்துழைப்புகள் குறித்தும் பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் புதுடில்லி விஜயத்துக்கு கணிசமான அளவு முக்கியத்துவம் வழங்கப்படுவதாக இந்திய வானொலி நேற்றிரவு அறிவித்தது.

இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு திரு விக்கிரமசிங்கா பாரிஸில் இருந்து புதுடில்லிக்கு இன்று செல்கின்றார்.

நாளைவரை புதுடில்லியில் தங்கிநிற்கும் போது இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங், நிதி அமைச்சர் மன்மோகன் சிங் ஆகியோரைச் சந்தித்து விரிவான பேச்சுகளை நடத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரேமதாசவின் காலைக்குப் பின்னர் இலங்கைத் தலைவர் இந்தியாவுக்கும் இடையிலான முதலாவது உயர்நிலை தொடர்பாக இந்த விஜயம் இருக்கும் என்று அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

நெருங்கிய பிணைப்புக்களை வலுப்படுத்திக் கொள்ளவும் இரு தரப்பு ஒத்துழைப்பை விரிவாக்கிக் கொள்ளவும் இரு நாடுகளும் கொண்டுள்ள விருப்பத்தின் வெளிப்பாடே இலங்கைப் பிரதமரின் வருகை என்று இந்தியாவின் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் விபரித்தார். (இ-எ)

## அரசு யுத்த நிறுத்தம் செய்தால் சமாதானத்துக்கு வாய்ப்பு உண்டு

### வெளிநாட்டு சமாதானக் குழுவினர் தகவல்

லண்டன், ஜூன் 21

நிபந்தனையற்ற யுத்தநிறுத்தத்துக்கு விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அரசு யுத்த நிறுத்தம் செய்யுமானால் சமாதானத்தை உருவாக்க ஏதுவான சாத்தியப்பாடுகள் குறித்து பேச்சு நடத்த முடியும் எனவும் அவர்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

யாழ். வந்து திரும்பிய 'செடக்' [illegible] சமாதானத் தூதுக்குழுவின் [illegible] வகித்த [illegible] இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அனுசரணையுடன் [illegible] பெற்ற தமது குழுவின் யாழ் [illegible] போது [illegible] எந்தவிதமான [illegible] தம்மால் [illegible] செல்லப்படவில்லை என்றும் — அவர் சொன்னார்.

இந்தச் சமாதானக் குழுவினர் சமீபத்தில் [illegible] விடுதலைப் புலிகள் பிரமுகர்களுடன் [illegible] பேச்சுவார்த்தை நடத்திவிட்டு கொழும்பு திரும்பியது தெரிந்ததே. [இ-5]

## ஈழ அகதிகள் 24 பேர் தமிழ்நாட்டில் கைதாகினர்

### கொள்ளைகளில் ஈடுபட்டனராம்

சென்னை, ஜூன் 21

தமிழ் நாட்டில் சமீப காலமாக இடம்பெற்ற கொள்ளைகள் தொடர்பாக 24 ஈழ அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். [illegible] பெட்ரோல் நிலையங்கள், வீடுகள் ஆகியவற்றில் கடந்த எட்டு மாதகாலமாக இடம்பெற்று வந்த கொள்ளைகளில் இவர்கள் சம்பந்தப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பிடிபட்டவர்களில் பெரும்பாலானோர் தமிழ் நாட்டின் அணையூர், கூடல்நகர் அகதி முகாம்களைச் சேர்ந்தவர்கள்.

சமீபத்தில் திருச்சி — மதுரை நெடுஞ்சாலையில் தமிழ்நாடு காவல் துறையினர் மேற்கொண்ட [illegible] சோதனையின்போது மதுரை கூடல் நகர் அகதி முகாமைச் சேர்ந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உடுகம்பொலவின் வருகை குறித்து பத்திரிகைகளில் முக்கியத்துவம்

### சிலவற்றில் வண்ணப் படங்கள்

கொழும்பு, ஜூன் 21

சர்ச்சைக்குரிய முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொல நாடுதிரும்பியிருப்பது தொடர்பான செய்திகளுக்கு கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

சில பத்திரிகைகளில் திரு உடுகம்பொலவின் வண்ணப் படங்களுடன் செய்திகள் வெளியாகியிருந்ததாகவும் —

கடந்த வெள்ளியன்று அவர் சென்னையில் இருந்து கொழும்பு திரும்பியபோது கட்டுநாயக்காவில் அவரைச் சந்திக்கச் சென்ற பத்திரிகையாளர்கள், புகைப்படப் பிடிப்பாளர்களினால் விமான நிலையம் நிரம்பி வழிந்தது என்றும் பி.பி.ஸி. சிங்களச் சேவையில் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை திரு. உடுகம்பொல முன் வைத்த போது மௌனம் சாதித்த பத்திரிகைகள் இப்போது அவருக்கு முக்கியத்துவம் அளித்துள்ளன என்று எதிர்க்கட்சி சார் பத்திரிகையாளர் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச ஆட்சியில் இருக்கையில் —

அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தெரிவிக்கும் உடுகம்பொலவின் சத்தியக் கடதாசிப் பிரதிகள் பரவலாக விநியோகிக்கப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா, காமினி திசநாயக்க, லலித் அத்துலத் முதலி முதலான அரசியல் தலைவர்களுக்கும் அவை விநியோகிக்கப்பட்டன.

ஆனால் அது பற்றி தேசிய பத்திரிகைகளில் எதுவும் பிரசுரிக்கப்படவில்லை என்றும் அந்தப் பத்திரிகையாளர் சுட்டிக் காட்டியுள்ளனர். (ஒ 5-6)

## சேபால நாடு திரும்பினார்

லண்டன், ஜூன் 21

தேசிய பாதுகாப்பு ஆலோசகராகவும், எயார் லங்கா நிறுவனத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ள ஜெனரல் சேபால ஆட்டிகல நேற்று லண்டனில் இருந்து விமானம் மூலம் புறப்பட்டார்.

நேற்று பிற்பகல் அளவில் அவர் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு விட்டதாக பி.பி.ஸி தெரிவித்தது.

இவர் லண்டனில் இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவராக இதுவரை கடமையாற்றி வந்தார் என்பது தெரிந்ததே.

## லஞ்சக் குற்றச்சாட்டு:

## நாடாளுமன்ற குழுவின்முன் ராவ் சாட்சியம் அளிப்பார்

புதுடில்லி, ஜூன் 21

லஞ்சக் குற்றச்சாட்டுத் தொடர்பாக இந்திய நாடாளுமன்ற கூட்டுக் குழு முன் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் சாட்சியம் அளிப்பார் என்று தெரியவருகிறது.

நாடாளுமன்ற கூட்டுக்குழு முன் சாட்சியம் அளிக்குமாறு பிரதமரை அழைக்கும் தீர்மானம் அடுத்த வாரத்தில் எடுக்கக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

பிரதமர் பி.வி. நரசிம்மராவுக்கு ஒருகோடி ரூபாவை வழங்கியதாக ஹர்ஷத் மேத்தா கூறியது தொடர்பாக அவருக்கு எதிராக அவதூறு வழக்குத் தொடருவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். முகவரி: திரு. பாஸ்கரன் வீடு, சீனாப்புலம், வதிரி, அளவெட்டி. (திசகம் ஆலங்கட்டை றோட்.) (26166)

கிற்றார் (Guitar) உடன் விற்பனைக்குண்டு. சுதர்ஷன் இருபராஜ், இல. 71, றக்கா றோட், யாழ்ப்பாணம். (26171)

முட்டையிடும் வெள்ளடி, பெண்டம், பாமாஸ் கோழிகளும், குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. அல்லலிங்கம், சாந்தன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (26179)

## தேவை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டியில் சோடா, ஜாம் என்பன கமிசன் அடிப்படையில் விற்பனை செய்யக் கூடியவர்கள் தேவைப்படுகின்றனர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: உணவு பதனிடல் பகுதி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், முதன்மைச் செயலகம், தாவடி. (இ/5282)

ஸ்ருடியோ வேலைகள் பழகிய - பழக விரும்பும் பெண்பாலார் (அனுபவமுள்ளோர்) விண்ணப்பிக்கவும். ஸ்ருடியோ நிதய சித்ரா, சங்கானை 26159

## பயிற்சி வினாத்தாள்கள்

புலமைப் பரிசில் வினாத்தாள்கள் விடைகளுடன் ஒவ்வொரு வாரமும் விற்பனையாகின்றன. விலை ரூபா 10/-. மங்களா கல்விச் சேவை வெளியீடான இவை, கிடைக்கும் இடங்கள்: பூபாலசிங்கம், மக்மிலன், ஸ்ரீ லங்கா மது, கொக்குவில் (5965)

## விஞ்ஞானம் ஆண்டு 11

விஞ்ஞானம் ஆண்டு 11 (உயிரின் தொடர்ச்சி அலகு 11-8.0) வெளிவந்துவிட்டது. ஆசிரியர்: வை. க. தவமணிதாசன். விலை ரூபா 50/-. கிடைக்குமிடம்: பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (இ-5290)

## புலமைப் பரிசில் வகுப்பு

சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தரும் திறமையுடன் நடத்தப்படும் புலமைப் பரிசில் Paper Class சனி, ஞாயிறு பிற்பகல் 4—6 நடைபெறுகின்றது. ஆண்டு 5 மாணவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாதிரிப் பரீட்சை நடைபெறும். புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (26155)

## மாற்றம்

இதுவரை காலமாக 32 கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 0-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. 6245)

## OLIVETTI

புதிய தட்டச்சு இயந்திரங்கள் (ஆங்கிலம்) விற்பனைக்கு உண்டு. 12 மாத காலம் விற்பனைக்குப் பிந்திய சேவை இலவசம். ஒரு வருட உத்தரவாதம் வழங்கப்படும். விற்பனை நிலையத்தில் பார்வையிடலாம். கலக்சி, புகைப்பட சேவை, இல. 3 7/1, 1ஆம் மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். சி 4785

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தினால் வருடாந்தம் வெளியிடப்படும் 'சமூக ஒளி' சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (த-5)

---

கோப்பாய்

## ஸ்ரீ வீரபத்திர சுவாமி கோயில் மஹோற்சவ கால

தொடர் இசைச் சொற்பொழிவு

# "கம்பராமாயணம்"



17 — 06 — 1993 தொடக்கம் 27 — 06 — 1993 வரை

தினமும் மாலை 6 மணிக்கு

நிகழ்த்துபவர்:
நல்லைக் குருமணியின் பிரதம சிஷ்யன்
''கானகதாவாரிதி''
இராமாயணதிலகம்
சுந்தர்மடம்
பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா

அனைவரும் வருக! இறையருள் பெறுக!

- மேற்படி பரிபாலன சபை.

(26178)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 31 — 12 — 1919

மறைவு: 13 — 07 — 1991

## அமரர் அ. ச. மகாதேவா

(முன்னாள் பிரபல நகை வியாபாரியும்-றோட்டரிக் கழக உறுப்பினரும்)

திதி: துதியை 21 — 06 — 1993

அன்புத் தெய்வமே! ஆண்டு இரண்டு சென்றாலும், உங்கள் அன்பு வதனம் காணாது இதயம் என்றுமே ஆறாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

- அன்புக் குடும்பத்தினர்.

இல. 105, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (26131)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயார் மடியில்: 15 — 01 — 1973

மண்ணின் மடியில்: 13 — 07 — 1991

## வீரவேங்கை கஜன்

(செல்வன் சின்னையா சிவரத்தினம்)

திதி: வளர்பிறை துதியை 21-06-1993

எரிகின்ற தாயகத்தின் மீட்பிற்காய்க் களம் குதித்தாய்
உறுதி நின்று போர் புரிந்தாய் எதிரணைகள் மத்தியிலே
இடைநடுவில் வீழ்ந்தனையே எம் இதயக் கோவிலிலே
குடிகொண்ட இளங் கொழுந்தே!
உமக்கு எமது அஞ்சலிகள்.
புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்!

— குடும்பத்தினர்.

அளவெட்டி வடக்கு, அளவெட்டி. (5960)

---

சாவகச்சேரி - கோவிற்குடியிருப்பு

ஞான வீரபத்திரர் ஆலயம்

## பத்தாம் திருவிழா விஞ்ஞாபனம்

வீரபத்திரர் அடியார்களே!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் 7ஆம் நாள் இன்று (21-06-1993) திங்கள் காலை 8 மணிக்கு அஸ்டோத்தரசத (108) சங்காபிஷேகமும் விசேட பூஜையும் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று, எம்பெருமான் அழகிய முத்துச் சப்பறத்தில் எழுந்தருளி நகர் வலம் வருதலும் இடம்பெறும்.

ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர, தவில் வித்துவான்களின் ★ மங்கள இசை ★ இடம் பெறும்.

(22 - 06 - 1993) செவ்வாய் பிராயச்சித்த அபிஷேகமும், நண்பகல் அன்னதானமும், மாலை வைரவ சாந்தியும் நடைபெறும். அடியார்கள் அனைவரும் திரண்டு வந்து வைபவங்களில் கலந்து எம்பெருமானை தரிசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
ஆலய பரிபாலன சபையினர்.

(26174)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 23 — 10 — 1926

உதிர்வு: 22 — 05 — 1993

## அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

எங்கள் ஒளி விளக்கே! எம் பாசதீபமே! எங்களை நீங்கள் விட்டுப் பிரிந்தாலும், எங்கள் இதயத்தை விட்டு நீங்கள் போகவில்லை. உங்கள் இனிய பூ முகத்தை காணாமல் நாங்கள் துடிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகள் இன்று (21-06-93) திங்கள் எமது இல்லத்தில் நடைபெறும் என்பதை நண்பர்களுக்கும் உறவினருக்கும், அறியத் தருகிறோம்.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

கைதடி கிழக்கு, கைதடி. (26177)

---

# ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் பண்டாரி சின்னத்துரை

(கிருஷ்ணா மோட்டோர் வேக்ஸ், கிருஷ்ணா மினிபஸ் உரிமையாளர்)

தோற்றம்: 12-07-1932

மறைவு: 02-07-1992

ஓர் ஆண்டு சென்றாலும், எம்மை வாழ வைத்த தெய்வமே! உங்கள் பிரிவு எம்மை, ஆறாத்துயர் கொள்ள வைக்கிறது. எங்கே ஐயா எம்மைவிட்டு பிரிந்து சென்றீரோ? அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய வேண்டி நிற்கும்;

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

செம்மாலை மாதா கோவில் ஒழுங்கை, வடக்கு வீதி, உடுவில். (5960)

---

# அறிவித்தல்

சித்த வைத்திய பட்டதாரிகள் [D. A. M. S. / B. S. M. S.]

அனைவரும் இன்று பி. ப. 2.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறைக்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

(26187) சித்தமருத்துவ பட்டதாரிகள் சங்கம்

---

LUXINTENEBRIS

# JAFFNA ENGLISH ACADEMY

## SPOKEN ENGLISH

The learners will be taught to cope with informing describing, narrating, instructing, eliciting expressing, reporting, expanding, developing clarifying, rephrasing et cetera. These situations cover the common demands of everyday life so that they can handle oral interaction with adequate confidence

There are two versions of our courses: One aimed at young people and adults and one for young learners between about 9 and 13 years of age.

Duration: 4 Months

JUNIOR BATCH — (Between 9and 13 years of age)
Weekends — 3to 4-30 p m.
Commencement— 04 — 07 — 1993

SENIOR BATCH — (Adults)
Weekends — 4 30 to 6p m.
Commencement — 04 — 07 — 1993
Mondays / Wednesdays — 4-30 to 6p.m.
Commencement — 05 — 07 — 1993
Lectures — By a panel of suitably qualified & experienced teachers of English.

## ELOCUTION

Aimed at training the students to provide excellent practice in distinct articulation.

Duration: 3 Months
Weekends — 8 to 9 a m.
Commencement — 04 — 07 — 1993

## NATIONAL CERTIFICATE IN ENGLISH (N. C. E. JULY 93 Examination)

Weekend Classes — 3to 4-30 p.m.
Commencement — 19 — 06 — 1993
Lectures: Kandiah Navarendran

## ENGLISH FOR SPEAKERS OF OTHER LANGUAGES (E. S. O. L)

English Language is taught right from the beginning to achieve high proficiency in written English

Weekends — 1 to 2-30 p.m.
Commencement — 04 — 07 — 1993
Lectures: Kandiah Navarendran

## TEST OF ENGLISH AS A FOREIGN LANGUAGE (TOEFL)

The syllabus is designed to evaluate the English proficiency of persons whose native language is not English

Weekend Batch — 8 to 10a m.
Tuesday/Friday Batch — 4-30 to 6p m.
Commencement — 02 — 07 — 1993
Lectures: Kandiah Navarendran

## ENGLISH AND BUSINESS COMMUNICATIONS

Ideal for those studying at school or college or university before entering employment and for those acquiring or updating skills in employment after a break in employment or when seeking a career change. The syllabus comprises the communication process, lines of communication, oral presentation, delivery, using visual aide, interview, communication barriers, written communication, graphic communication group discussion, briefing sessions, public relations, social aspects of communications, mass media communications, customer relations, et cetera.

Duration: 6 Months
Tuesdays / Fridays — 3 to 4-30 p. m.
Lectures: Kandiah Navarendran

## HIGHER ENGLISH COURSE

The syllabuses are not intended to be exhaustive. The G. C. E. (Advanced Level will also be covered. An ideal course for those who desire to acquire updating skills in English Language & Literature.

Duration: One Year
Weekends — 4-00 ot 6-00 p.m.
Commencement — 04 — 07 — 1993
Lectures: Kandiah Navarendran

9, Rakka Lane,
Chundikuli, Jaffna.

(C/5268)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பொருத்தமான நிபந்தனை

பாதுகாப்புப் படையினர் தடுத்து வைத்துள்ள விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் கைதிகளின் பட்டியலை அரசு தராவிடினும்—

தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையை அரசு நீக்குமானால்—

இப்போது உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தென்னிலங்கை யுத்தக் கைதிகளை விடுவிக்கத் தயார்.

யுத்தக் கைதிகளை விடுவிப்பது சம்பந்தமாக அரசாங்கத்தின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதியின் தூதுவர் பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவிடம் விடுதலைப் புலிகள் இவ்வாறு தெரிவித்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் இந்த நிபந்தனை மிகவும் பொருத்தமான ஒன்றாகும். அரசாங்கம் தட்டிக்கழிக்க இடமில்லாத நியாயமான நிபந்தனையாகும். மிகவும் ராஜதந்திரம் மிக்கதும், அரசாங்கத்தின் உண்மையான நிலைப்பாட்டை வெளிக்கொணரச் செய்வதற்கான தகுந்த வழிமுறையுமாகும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு தமிழ் மக்கள் மீது அக்கறையில்லை. அவர்களின் நலன்கள் மீது கரிசனை இல்லை. தமது ஆயுதப் போராட்டத்தை முதன்மைப்படுத்துவதிலேயே கவனம் செலுத்துகிறார்கள் என்றெல்லாம் அரசாங்கம் கடந்த பல ஆண்டுகளாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் செய்துவரும் பொய்ப்பிரசாரத்தை தக்கபடி நேருக்கு நேர் நின்று முறியடிக்கும் வல்லமையுள்ள ஆயுதமாகவும் இந்த நிபந்தனை விளங்குகிறது.

போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் தாம் பிடித்து வைத்திருக்கும் யுத்தக் கைதிகளை பரஸ்பரம் உரிய தரப்பிடம் ஒப்படைப்பதுதான் சர்வதேச யுத்தக் கைதிகள் பரிமாற்றத்துக்கான பொது விதி. ஆனால் ஸ்ரீலங்கா அரசாங்கம் அந்த விதிமுறைக்கு இணங்க யுத்தக் கைதிகளைப் பரிமாறிக்கொள்ள முன்வரவில்லை; இணங்கவில்லை.

இந்த நிலையில், ஸ்ரீலங்கா அரசின் வசம் உள்ள தமது உறுப்பினர்களின் நலனுக்கும் மேலாக, மக்கள் நலனை முன்னிறுத்தி பொருளாதாரத் தடையை நீக்க வேண்டும் என்ற நிபந்தனையை விடுதலைப் புலிகள் விதித்திருக்கிறார்கள். தமது இயக்க நலனுக்கன்றி, மக்கள் நலனுக்காகவே விடுதலைப் புலிகள் உழைக்கிறார்கள் என்பதனை இது ஒன்றே உலகத்துக்கு எடுத்துக் காட்டுவதற்குப் போதுமானதாகும்.

தமிழர்கள் ஸ்ரீலங்கா அரசின் பிரசைகள் என்று பெயரளவில் உரிமை கொண்டாடும் கொழும்பு அரசு, அவர்கள் மீது பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடைகளை விதித்து, திணித்து கடந்த இரண்டரை வருடங்களாகக் கொடுமைப்படுத்தி வருகிறது. யுத்தத்தின் பாற்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட, மேலதிக கொடுமைகள் இவை.

பொருளாதார, போக்குவரத்துத் தடைகளை நீக்க வேண்டும் என்று ஆயர் கென்னத் பெர்னாண்டோ முதல் வெளிநாட்டுச் சமாதானக் குழுக்கள் வரை வற்புறுத்தியும் அரசு நகரவில்லை.

ஆனால் புலிகள் விதித்த புதிய நிபந்தனையின் பின்னர் அப்படித் தட்டிக் கழிக்க வாய்ப்பில்லை. சிங்கள யுத்தக் கைதிகளின் உண்ணாவிரதம் தொடர்கிறது. அவர்களது உறவினர்கள் நேரில் இருந்து அதனைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை மடியவிட்டால் சிங்களப் பொதுமக்களின் எதிர்ப்பை மட்டுமன்றி படையினரின் எதிர்ப்பையும் சம்பாதிக்க நேரும். எதிர்க் கட்சிகளுக்கும் அரச விரோத பிரசாரத்துக்குச் சாதகமாக அமையும்.

விடுதலைப் புலிகளின் நிபந்தனை நிராகரிக்கப்பட்டால் அரசுக்கு சிங்கள மக்களின் நலனிலும் அக்கறையில்லை; தமிழர் நலனிலும் அக்கறையில்லை என்றாகி விடும்.

எப்படியோ, புலிகளின் நிபந்தனை அரசுக்கு என்றுமில்லாத கடினமான பரீட்சையாகும்!

---

நள்ளிரவிற் காணாமற்போன

# பிரியங்காவைத் தேடி 'கறுப்புபூனை'கள் வேட்டை

## புதுடில்லி நகரில் பரபரப்பு

புதுடில்லி, ஜூன் 21

நள்ளிரவு 12 மணி. ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்காவை வீட்டில் காணவில்லை. துடித்துப்போனார் தாய் சோனியா காந்தி.

வீட்டில் பாதுகாப்புக் கடமையில் இருந்த கறுப்புப் பூனைப் படையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. உத்தரவுகள் பறந்தன. புதுடில்லி நகரில் நள்ளிரவு நேரம் பரபரப்பு.

சில தினங்களுக்கு முன்னர் நடந்த இந்தச் சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தியின் மனைவி சோனியா காந்தி புதுடில்லி ஜன்பத் சாலையில் உள்ள வீட்டில் மகள் பிரியங்கா, மகன் ராகுல் ஆகியோருடன் வசித்து வருகிறார்.

சம்பவ தினம் இரவு 9 மணியளவில் இரவுச் சாப்பாட்டை தாயாருடன் பிரியங்கா ஒன்றாக அமர்ந்திருந்து சாப்பிட்டார்.

ஆனால் நள்ளிரவு 12 மணியளவில் பிரியங்காவை அவரது அறையில் காணவில்லை. இரவு 10 மணியில் இருந்தே அவர் வீட்டில் இல்லை எனத் தெரியவந்தது.

அதிர்ச்சியடைந்த தாயார் சோனியா கறுப்புப் பூனைப் படையினரிடம் தெரிவித்தார். அவர்கள் அவசர அவசரமாக டில்லிப் பொலிஸாருடன் தொடர்பு கொண்டனர். அதை அடுத்து டில்லிப் பொலிஸார் உஷார்ப்படுத்தப்பட்டனர்.

இறுதியாகப் பொலிஸார் பிரியங்கா இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தனர்.

மத்திய அமைச்சர் ஒருவரின் உறவினரோடு பிரியங்கா மாருதிகாரில் டில்லி ரிங் ரோட்டில் பயணம் செய்து கொண்டிருந்தது தெரியவந்தது.

அது குறித்து அவரது வீட்டுக்கு கறுப்புப் பூனைப் படையினருக்கு அறிவிக்கப்பட்டது. கறுப்புப் பூனைப் படை அதிகாரிகள் ரிங் ரோட்டுக்கு விரைந்தனர். பிரியங்கா பயணம் செய்த கார் அருகே சென்றார் அதிகாரி ஒருவர். அம்மா [சோனியா] உங்களுடன் பேச வேண்டுமாம். உங்களை உடனே அழைத்து வரச் சொன்னார் என்று பவ்வியமாக அதிகாரி பிரியங்காவிடம் கூறினார்.

கறுப்புப் பூனைப் படை அதிகாரி சொன்னதை பிரியங்கா காதில் போட்டுக் கொள்ளவில்லை. இன்னும் அரை மணி நேரத்தில் வந்து பேசுகிறேன் என்று சொல்லுங்கள் எனக் கூறி விட்டு அதிகாரியைத் திருப்பி அனுப்பி விட்டார்.

அதன் பின்னர்; பிரியங்காவுக்கு குண்டு துளைக்காத ஆறு கார்களில் கறுப்புப் பூனைப் படையினர் பாதுகாப்பு வழங்கினர். அதே சமயம் பொலிஸார் ரிங் ரோட்டில் வேகமாகச் சென்று கொண்டிருந்த லொறிகள், டிரக்குகள் மற்றும் வாகனங்களைத் தடுத்து நிறுத்தினர். அந்த வீதியால் வாகனங்கள் செல்வது தடை செய்யப்பட்டது.

இறுதியாக தெரிய வந்தது பிரியங்கா நண்பர் ஒருவருடன் கார் ஓடிப் பழகிக்கொண்டிருந்தார் என்று.

வீடு திரும்பிய பிரியங்காவை காரசாரமாகக் கண்டித்தார் தாய் சோனியா. "உன்னை எவராவது சுட்டுவிட்டால் நான் என்ன செய்வேன்" என்று ஆங்கிலத்தில் கோபமாக மகளை கண்டித்தார் சோனியா. (ஒ)

---

யாழ். மாநகர சபைக்கு

# 250 தார் பரல்கள்; கூட்டுப்படை அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாநகரசபைப் பகுதியில் உள்ள வீதிகளின் திருத்த வேலைகளுக்காக 250 தார் பரல்களை இங்கு எடுத்துவர கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அனுமதியை யாழ். அரச அதிபர் கூட்டுப்படைத் தலைமையகத்திடம் இருந்து பெற்று யாழ். மாநகர ஆணையாளருக்கு அதுபற்றி அறிவித்துள்ளார்.

மேற்படி தார் பரல்கள் கப்பல் மூலம் விரைவில் இங்கு எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாநகரசபைப் பகுதியில் உள்ள முக்கிய வீதிகள் அனைத்தும் மிக மோசமாக சேதமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

---

# தேர்தல் அறிக்கைகளை பரிசீலிக்க தெரிவுக் குழு

## சபையில் பிரேரணை நிறைவேற்றம்

1988ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 1989இல் நடைபெற்ற பொதுத் தேர்தல் ஆகியன பற்றி தேர்தல் ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கைகளை பரிசீலனை செய்வதற்காக தெரிவுக் குழு ஒன்றை நியமிக்கும் பிரேரணை நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளி நிறைவேற்றப்பட்டது.

சபை முதல்வரான அமைச்சர் விஜேபால மெண்டிஸ் பிரேரணையைச் சமர்ப்பித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரையும் உறுப்பினர்களையும் சபாநாயகர் நியமிப்பார். இக்குழுவில் 18 உறுப்பினர்கள் இடம் பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது (ஒ-எ)

---

# கேட்டதை விட கூடுதலாக ஸ்ரீலங்காவுக்கு நிதியுதவி

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் கூடிய இலங்கைக்கு உதவும் நாடுகள், ஸ்ரீலங்கா அரசு கோரியதிலும் கூடிய அளவு நிதி உதவியை வழங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில், அடுத்த வருடத்துக்கு 84 கோடி 90 லட்சம் டொலரை வழங்க அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதேசமயம் வடக்கு கிழக்கு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருமாறு ஸ்ரீலங்கா அரசை மேற்குலக நாடுகள் கோரியுள்ளன

கடந்த காலங்களில் மேற்குலக நாடுகள் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் குறித்து குரல் எழுப்பி இருந்தன ஆனால் இம்முறை இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்றும்—

மனித உரிமைகள் நிலை குறித்து அரசு சில நடவடிக்கைகளை எடுத்துள்ளதே இதற்குக் காரணம் என்று பி.பி.ஸி. சிங்கள சேவையில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-6]

---

## மூதாட்டி மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

பருத்தித்துறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்து ஒன்றில் படுகாயமடைந்த பெண்மணி நேற்று அதிகாலை யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

பருத்தித்துறை பிரதான வீதி சாரையடியில் இடம்பெற்ற விபத்தில் பருத்தித்துறை விஸ்வகுல ஒழுங்கையைச் சேர்ந்த சின்னையா மகேஸ்வரி (70வயது) என்ற வயோதிபப் பெண்ணே மரணமானார். (ஒ-51)

---

# வெளிநாட்டுக் கடிதங்களில் வரும் பணம் அபேஸ்!

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடபகுதியிலுள்ள உறவினர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் கடிதங்கள் கொழும்பில் பிரிக்கப்படுவதால் அவற்றில் வைத்து அனுப்பப்படும் பணமும் (வெளிநாட்டுகரன்ஸி) பறிபோய் விடுகிறது.

இதனால் கரன்ஸி நோட்டுக்களை அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு தமது வெளிநாட்டு உறவினர்களுக்கு அறிவிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன. (த-17)

---

# ஆயுள்வேத பரீட்சையை இங்கே நடத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஆயுள்வேதத் திணைக்களம் நடத்தும் ஆயுள்வேத மருத்துவ டிப்ளோமா 1993ஆம் ஆண்டுக்கான இறுதிப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்தும்படி வட இலங்கை சுதேச வைத்திய சபை ஆயுள்வேத ஆணையாளரைக் கேட்டுள்ளது.

அடுத்த மாதம் 17ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கு யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தோற்றுவதற்கு அவர்களுக்குப் போக்குவரத்து வசதி கிடையாது எனவும், அரசால் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பான ஒரேயொரு வழியான கப்பல் மூலம் செல்வதற்குத் தம்மால் ஒழுங்கு செய்துதர முடியாது என்று யாழ். அரச அதிபர் லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரி அதிபருக்கு அறிவித்துள்ளார் எனவும், எனவே பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்த ஏற்பாடு செய்யுமாறும் வட இலங்கை சுதேச வைத்திய சபை ஆயுள்வேத ஆணையாளரைக் கேட்டிருக்கிறது. (க)

---

## ஆலயங்களில்

பொலிகண்டி கந்தவன ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த சனியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்களுக்கு நடைபெறும். உற்சவ நாட்களில் தினமும் இரவு 7 மணிக்கு ஈழ நல்லூர் சித்தாந்த வித்தகர் கலைமாமணி சாம்பசிவசர்மா "கந்தபுராணம்" என்ற தலைப்பில் உரையாற்றுவார். (த-5)

o o o

யாழ்ப்பாணம் கோட்டை ஸ்ரீ முனீஸ்வரன்கோவில் வருடாந்த உற்சவம் இன்றுமாலை 4 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 24 நாட்களுக்கு உற்சவம் நடைபெறும். (த 5-30)

o o o

திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தில் இடம்பெற்று வரும் தொடர் நிகழ்வில் இன்று "அபிராமிப்பட்டர்" என்னும் பொருளில் கானகதாவாரிதி வை. நித்தியானந்தசர்மா இசைச் சொற்பொழிவாற்றுவார். அ

o o o

சுன்னாகம் மயிலணி கந்தசுவாமி கோவிலில் புதிதாக அமைக்கப்பெற்ற கைலாச வாகனத்தில் முருகப்பெருமான் இன்று வீதிவலம் வருவார். (அ-89)

---

# உடுவில் மகளிர் கல்லூரியில் கணித மூலவள நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

உடுவில் மகளிர் கல்லூரியில் கணித மூலவள நிலையம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வேதநாயகம் இதனை திறந்து வைத்து உரை நிகழ்த்தினார்.

அவர் தமது உரையில், "யாழ். மாவட்டத்திலேயே ஒரு திறமையான — முதல்தரமான கணித மூலவள நிலையத்தை ஆரம்பித்த பெருமை உடுவில் மகளிர்கல்லூரியையே சாரும்" என்று கூறினார்.

கல்லூரி அதிபர் செல்வி செல்லையா தமது உரையில், கணித ஆசிரியர்களின் முயற்சியைப் பாராட்டினார். (இ)

---

## ஜப்பானிய பொதுத் தேர்தல் ஜூலை 18 இல்

டோக்கியோ, ஜூன் 20

ஜப்பானிய அரசாங்கம் கடந்த வெள்ளி கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றில் தோற்கடிக்கப்பட்டது.

அங்கு தற்போது புதிய கூட்டரசாங்கம் அமைக்கப்படும் என்று டோக்கியோவிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

ஜப்பானிய பொதுத் தேர்தல் ஜூலை மாதம் 18 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஏ)

---

சாயிபாபாவை கொல்ல முயன்ற

# நான்கு இளைஞர்களும் பல்கலைக்கழக மாணவர்

சென்னை, ஜூன் 21

சாயிபாபாவைக் கொலை செய்ய முயன்று, பின்னர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான நான்கு இளைஞர்களும், புட்டபர்த்தியில் உள்ள சாயிபாபா பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுரேஷ் குமார், சுரேஷ் சாந்தாராம், கே. சாயிராம், ஜெகநாதன் ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்ட அந்த நான்கு இளைஞர்களும் ஆவர்.

பாபாவின் கொலை முயற்சி கடந்த 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடந்தது என்பது தெரிந்ததே. அன்றைய தினம் நள்ளிரவு 12 மணியளவில் தான் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாபாவின் அறைக்குச் செல்ல இளைஞர்கள் முயன்ற சமயம், அங்கு நின்றவர்களுடன் வாக்குவாதப்பட்டு பின்னர் மோதல் இடம்பெற்றது என்பதும் —

அப்பொழுது அவர்களின் கத்திக்குத்துக்கு இலக்காகி மெய்க்காவலர் ஒருவரும் மற்றொருவரும் உயிரிழக்க நேரிட்டது என்பதும் தெரிந்தவையே.

அதன் பின்னர் —

அந்த நான்கு இளைஞர்களும் பாபாவின் அறையை நோக்கிச் சென்றனர்; அதை அடுத்து ஆசிரம ஊழியர்கள் அங்கிருந்த அபாயச்சங்கை இயக்கினர். சத்தம் கேட்டு துப்பாக்கிகளை ஏந்திய பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து வந்தனர். இளைஞர்கள் பொலிஸாரை தாக்கிவிட்டு, தாங்கள் கொண்டு வந்திருந்த துப்பாக்கிகளுடன் பாபாவின் அறைக்கதவை திறந்து உள்ளே நுழைய முயன்றனர்.

உடனே பொலிஸார் அவர்களை நோக்கிச் சுட்டனர். அவர்கள் அதே இடத்தில் பிணமானார்கள்.

இவ்வாறு சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஒ)

---

# குடும்ப பதிவு அட்டை மோசடிகளில் ஈடுபட வேண்டாம் என அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21

குடும்பப் பதிவு அட்டைகள் மற்றும் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான பயண அட்டைகள் ஆகியவற்றில், பலர் மோசடிகளில் ஈடுபட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வீண் அசௌகரியங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் தமிழீழ போக்குவரத்துக் கண்காணிப்பு பிரிவினர் விடுத்துள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

வடபகுதிக்கு வெளியே செல்வதற்கான அனுமதி அட்டைகளில் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினரே எழுத உரித்துடையவர்கள். அதேபோல் குடும்பப் பதிவு அட்டையிலும், பிணை விவரங்களிலும் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவினரும், மாற்றம் சம்பந்தமான விடயங்களை அனுமதிபெற்ற கிராமசேவகர்களும் எழுத உரித்துள்ளவர்களாவர்.

சுய எண்ணப்படி குடும்பப் பதிவு அட்டையில் எழுதப்படுவதோ, பிழையான தகவல்களை பதிந்து வைத்திருத்தலோ, ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பப் பதிவு அட்டைகளை வைத்திருத்தலோ மோசடிகளாகக் கருதப்படும்.

குடும்பப்பதிவு அட்டை சம்பந்தமான சில அறிவுறுத்தல்கள்

★ இதுவரை குடும்பப் பதிவு அட்டை பதிய தவறியவர்கள் உடனடியாக தமது கிராமசேவகரை தொடர்பு கொண்டு இதுவரை பெற்றுக் கொள்ளாததற்கான காரணத்துடன் அட்டையில் பதியப்பட வேண்டிய சகல விடயங்களையும் எழுதி கிராமசேவகருடாகக் குடும்ப அட்டைப் பகுதிக்கு அனுப்பினால் புதிய அட்டை இராமசேவகர் மூலம் வழங்கப்படும்.

குறிப்பு: புதிதாக வடபகுதிக்குள் வந்த குடும்பங்கள் அல்லது தனிநபர்களாயின் உரிய விவரங்களுடன் வடபகுதிக்குள் நுழைவோருக்கான அட்டையினையும் சேர்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

அ. ஒரு குடும்பம், குடும்பப் பதிவு அட்டையில் பதியப்படும்போது மணமாகாத உறுப்பினர் அனைவரும் பதியப்படல் வேண்டும். ஏதேனும் காரணங்களால் வடபகுதிக்கு வெளியே வசிக்கும் குடும்ப உறுப்பினர் பதியப்படாமல் விடுபட்டு இருப்பின் அவ்வுறுப்பினரின் பெயர், பிறந்த ஆண்டு, உறவு முறை, தேசிய அடையாள அட்டை இலக்கம், தொழில், தொழில் இடம் ஆகியவற்றை எழுதி குடும்ப பதிவட்டையுடன் கிராமசேவகர் ஊடாக அனுப்பி வைத்தால், குடும்ப அட்டை பகுதியினரால் அந்த உறுப்பினர் சேர்க்கப்பட்டு குடும்பப் பதிவு அட்டை மீள வழங்கப்படும்.

ஆ. புதிய பிறப்புக்கள், இறப்பு, விவரம் சேர்த்தல், திருத்தம் செய்தல் போன்ற காரணங்களுக்கு குடும்பப் பதிவு அட்டையுடன் மாற்றம் சம்பந்தமான விவரத்தை கிராமசேவகர் மூலம் அனுப்பி வைத்தால் குறிப்பிட்ட மாற்றங்கள் பதிந்து தரப்படும்.

★ திருமணமான புதிய குடும்பத்தினர் தமக்கான குடும்பப் பதிவு அட்டை பெறுவதற்கு கவனத்திற் கொள்ள வேண்டியவை;

1. மணமகனின் பெற்றோரின் குடும்பப் பதிவு அட்டையையும்,

2. மணமகளின் பெற்றோரின் குடும்பப் பதிவு அட்டையையும்,

3. திருமண அத்தாட்சிச் சான்றிதழையும்.

4. இருபகுதியினரின் குடும்பப் பதிவு அட்டைகளிலும் தமது பெயர்களை நீக்கி புதிய அட்டை பெற விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தையும்,

5. இரு பகுதி கிராமசேவகரினதும் உறுதிப்படுத்தலையும் ஒன்றாக இணைத்து புதிய குடும்பம் வசிக்க இருக்கும் கிராம சேவகர் ஊடாக அனுப்பி வைக்கப்படின் குடும்ப அட்டைப்பகுதியால் புதிய அட்டை வழங்கப்படும்.

குறிப்பு: பெற்றோரின் கிராமசேவகர் பிரிவு தவிர்ந்த வேறு கிராமசேவகர் பிரிவின் ஊடாகவும் விண்ணப்பிக்கலாம்.

★ குடும்பப்பதிவு அட்டை இடமாற்றம் செய்யப்பட முடியாதது ஆகும். குடும்பங்கள் இடமாற்றத்தினால் கிராமசேவகருடாக விண்ணப்பித்தால் தற்காலிக முகவரியின் மாற்றத்தைப் பதிய அனுமதி வழங்கப்படும். நிரந்தரமாக ஆறு மாதங்களுக்கு மேல் அம்முகவரியில் வசித்தால் மட்டுமே புதிய அட்டை அவ்விடத்து நிரந்தர முகவரியுடன் வழங்கப்படும்.

★ குடும்பமாக அன்றி தனியாக யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், உயர் வகுப்பு மாணவர்கள், தொழில் நிமித்தம் தங்கியுள்ளவர்கள், பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிகள் ஆகியோர் தனி நபர் அட்டை பதிந்திருத்தல் வேண்டும். பல்கலைக்கழக மாணவர், மாணவர் ஒன்றியத்தினூடாகவும் ஏனையோர் உத்தியோகபூர்வ கடிதத்துடன் கிராம சேவகர் ஊடாகவும் விண்ணப்பிக்க வேண்டும்.

★ யாழ். மாவட்டத்தில் வசிக்கும், யாழ். மாவட்டம் தவிர்ந்த பிறமாவட்டத்தைச் சேர்ந்த குடும்பங்களாயின் தங்கியுள்ள பகுதி கிராம சேவகருடாக குடும்பப் பதிவு அட்டைக்குரிய முழு விவரங்களையும் அனுப்பிவைத்தால், அவ்விவரங்கள் குடும்ப அட்டைப் பகுதியால் சரிபார்க்கப்பட்டு அவர்களிற்கான குடும்பப் பதிவு அட்டை வழங்கப்படும்.

★ வடபகுதிக்கு வெளியே செல்லும்போது குடும்பப் பதிவு அட்டையை அவசர அனுமதி வழங்கும் அலுவலகங்களில் ஒப்படைப்பவர்கள், மீண்டும் வந்ததும் அதே அலுவலகத்திற்கு சென்று குடும்பப் பதிவு அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
விராட் விஸ்வப் பிரம்மணே நம

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் ஸ்ரீமுக வருஷம் ஆனித் திங்கள் 9 ஆம் நாள் (23-06 93) புதன்கிழமை பகல் 8. 30 முதல் 11. 00 மணி வரை வரும் சுபவேளையில்

எமது சிரேஷ்ட புத்திரி, திருநிறை செல்வி

**ஜலஜா அவர்களுக்கு**

பூப்புனித மங்கள நீராட்டு விழா நிகழ்த்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் சமுகந்தந்து எமது செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

✶ அன்பர்கள் யாவரும் இதனையே அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். ✶

தங்கள் நல்வரவை நாடும்
அ. யோகராசாவும்
பாரியார் மஞ்சுளாவும்

சொர்ண வடலி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
[26181]

## சீட்டிழுப்பு பின்போடப்பட்டது

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விளையாட்டுக் குழுவினரால் 22-6 93 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 22-7 93 இல் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

செயலாளர்
விளையாட்டுக் குழு

(சி/5291)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

அன்னை மடியில்: 01 – 06 – 1957
ஆண்டவன் திருவடியில்: 21 – 05 – 1993


### அமரர் இராமலிங்கம் கேசவன்
(கோபி)
(யாழ். மருத்துவ பீட இறுதி ஆண்டு மாணவன்)
1986

எங்கள் ஆசை மகனே! அன்பான சகோதரனே!
என் உயிர் நாயகனே!
எங்கள்
பாசமுள்ள அப்பாவே! அன்பான மருமகனே!
இனிய பெறா மகனே!
ஆருயிர் மைத்துனனே!
அருமையான மாமாவே!
நேசமுள்ள சித்தப்பாவே!
உங்கள் சிரித்த முகம் எங்கே?
சுந்தர வதனம் எங்கே?
நெற்றித் திலகம் எங்கே?
உங்களைப் பார்த்திடத் துடிக்கின்றோம்
சித்த வைத்தியப் பரம்பரையில் வந்த
சுந்தரப் பேரனே! நீ ஆங்கில வைத்தியராகு முன்
எங்கு சென்றாய் எமை விட்டு!
காலம் நெருங்கியதோ! உன்னை
பேரன்மார் வந்து அரவணைத்துச் சென்றனரோ!
எப்பிறப்பில் காண்போம் இனி?
ஆண்டவனின் திருவடியில்
அமைதி கொள்வாய் கண்மணியே!

உம்முடைய ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி

இல. 134' செல்லர் வீதி,
நல்லூர்.
(26182)
மாமா குடும்பத்தினர்,
மாமிமார், பாட்டி.

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 27 – 08 – 1959
உதிர்வு: 02 – 07 – 1992

### கந்தசாமி கனகலிங்கம் [கனகு]
லொறிச்சாரதி

எங்களுயிர்க் கனகுவே! பொங்குகின்ற சுந்தரனே
தங்களுக்கேன் இந்நிலை!
தாங்குமோதான் எங்கள் மனம்.

இங்ஙனம்:
உன்பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
தாய், தந்தை சகோதரர்கள்.
[குடும்பத்தினர்]

புகையிரத வீதி,
மல்லாகம்.
(5968)

## தங்கப் பதக்கம் பெறுவோர்

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் நடத்தி வரும் சைவசமய பாட எழுத்துப் பரீட்சையில் இவ் ஆண்டு பிரிவுகளின் அடிப்படையில் தங்கப் பதக்கம் பெற்றுக் கொள்வோர் விவரம்!

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு:- | சுட்டெண் ஆ/8 729<br>நிருஷா இராமச்சந்திரா<br>யா/தெல்லிப்பளை மகாஜன கல்லூரி |
| கீழ்ப்பிரிவு:- | சுட்டெண் கீ/9 830<br>கணேசன் சேந்தன்<br>தனிப்பட்ட பரீட்சார்த்தி |
| மத்திய பிரிவு:- | சுட்டெண் ம/9 522<br>மகேந்திரராசா பிரவீணன்<br>யா/தெல்லிப்பளை மகாஜன கல்லூரி |
| மேற்பிரிவு:- | சுட்டெண் மே/9 663<br>சாந்தினி பாலசுப்பிரமணியம்<br>தனிப்பட்ட பரீட்சார்த்தி |

இணுவில் இந்துசமய வளர்ச்சி சங்கம்
இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபை
(26184)

உ
கொக்குவில்
ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய வருடாந்த

## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

22 - 06 - 1993 தொடக்கம் 01 - 07 - 1993 வரை.
22 06 1993 செவ்வாய்க்கிழமை காலை 8 00மணி
சங்காபிஷேகம்

தினமும் மாலை 5 00 முதல் 6 00 வரை
**பெரியபுராணம்**
(தொடர் விரிவுரை)

நிகழ்த்துபவர்:
**திரு. செ. சத்தியமூர்த்தி**
(ஆசிரியர்)

அனைவரையும் பேருரையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்:
- பரிபாலனசபை.
(26170)

வற்றாத வளம் சூழ்ந்த வன்னியிலே இருந்து வந்திருக்கும் ;

## "மாட்டிறைச்சி வற்றல்"

தரமான இறைச்சியிலே தயாரித்த வற்றல்!
சாதாரண இறைச்சியிலே சுலெலும் கலந்திருக்கும்!
இந்த வற்றலிலோ, இறைச்சியே தனித்திருக்கும்!

★ நான்கு கிலோ இறைச்சியில்-
ஒரு கிலோ வற்றல் பெறப்படுகின்றது.

மலிவான விலையினிலே சுவையான இறைச்சி வற்றல்
**1 கிலோ வற்றல் 160/- மட்டுமே!**
மொத்தமாகவும், சில்லறையாகவும் வாங்கலாம்.

தொடர்புகளுக்கு:
01) உதயம் பல்பொருள் அங்காடி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
02) மொத்த விற்பனை நிலையம்,
கொக்குவில்
(சி-5287)

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் இராசரத்தினம்

சங்கானை கிழக்கு தேவாலய வீதியைச் சேர்ந்த பொன்னம்பலம் இராசரத்தினம் அவர்கள் 18 - 06 - 93 அன்று காலமானார்.

இவர் புஷ்பராணியின் அன்புக் கணவரும், திருமதி பரிபூரணம் கந்தையா, திரு சிற்றம்பலம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கிருபைராசா, ஜெயராசா, செல்வராசா, திருமதி புஷ்பதேவி அழகரத்தினம், திருமதி புஷ்பவதி நேசராசா, யூசராசா ஆகியோரின் மைத்துனரும்—

குணரட்ணம் (இத்தாலி), புஷ்பரட்ணம் (இத்தாலி), கிருபைரட்ணம் (சங்கானை ப நோ. கூ. ச.), செல்வகுமார் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாகரன் (இருபாலை), யூலியட் (இத்தாலி), பொன்னம்பலம் (மானிப்பாய் ப. நோ கூ. சங்கம்), றஞ்சினி (இத்தாலி), வசந்தி (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நேற்று (20 06 - 93) பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
திருமதி பு. இராசரத்தினம்
(மனைவி)
ச. பொன்னம்பலம்
(மருமகன்)

தேவாலய வீதி.
சங்கானை.
(26186)

## தேசிய அரசு: பிரதமர் ரணில் மறுப்பு

கொழும்பு, ஜூன் 21
தேசிய அரசு ஒன்றை அமைக்கும் முயற்சி எதும் இடம்பெறவில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ''சண்டே ஐலண்ட்'' ஆசிரியருக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் இது தொடர்பாக எந்தப் பேச்சும் இடம்பெறவில்லை என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தில் சிலர் தேசியக் கருத்துடன்பாடு காணப்படுவதன் அவசியம் பற்றிப் பேசினார்கள். அது நல்ல விஷயமாகும் என்றும் பிரதமர் கூறினார்.

## உள்ளூர் நூல்கள் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 21
உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு உள்ளூர் நூல்களை விற்பனை செய்யும் விற்பனை நிலையம் ஒன்று, எதிர்வரும் ஜூலை மாதம் 24ஆம் திகதி சனிக்கிழமை தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்.

உள்ளூர் நூல் வெளியீட்டு ஊக்குவிப்பு அமைப்பு இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு சு. டிவகலாலா தலைமையில் யாழ். இந்துக்கல்லூரியில் இதற்காக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது. (த-111)

## புலிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மக்கள் மனதில் பதிப்பதற்கே அரசு இத்தகைய திரிபுபடுத்தலில் ஈடுபட்டிருக்கிறது.

யுத்தக் கைதிகளை பரிமாற்றம் செய்வதில் கையாளப்படும் பொது விதி முறையான இரு தரப்புக் கைதிகளையும் பரஸ்பரம் விடுதலை செய்யும் நடைமுறையை புறக்கணித்ததை விட—

விடுதலைப் புலிகளின் இப்போதைய நிபந்தனையைத் திரித்துக் கூறுவது மிகவும் மோசமான ஓர் அணுகுமுறை என்று அவதானிகள் தெரிவித்தனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் சிறைக் கைதிகளின்பெயர்ப்பட்டியலைஅரசு வழங்கமறுத்ததால்விடுதலைப் புலிகள் ஜனாதிபதியின் தூதராக யாழ் வந்த பிரிகேடியர் வீரசேகரவிடம் பொருளாதாரத் தடையை நீக்குமாறு கேட்டிருந்தனர்.

பொருளாதாரத் தடையால் தமிழ் மக்கள் தாங்கொணாத் துயரங்களுக்கும் கஷ்டங்களுக்கும் ஆளாகியுள்ளனர். அதனால் அத்தியாவசியப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டுள்ள இத்தடை நீக்கப்பட்டால் சிங்கள கைதிகள் விடுதலை செய்யப்படுவர். அத்துடன் இது சமாதான சூழ்நிலையை உருவாக்க ஏதுவாகவும் அமையும் என்றுமே விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பிரிகேடியர் வீரசேகரவிடம் தெரிவித்திருந்தனர். (அ-5)

## ஈழ அகதிகள்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
தேவா என்பவர் கத்தியோடு காணப்பட்ட சமயம் கைது செய்யப்பட்டாராம்.

அவர் கொடுத்த தகவலை அடுத்தே எஞ்சிய ஈழ அகதிகள் கைது செய்யப்பட்டனர்.

ஈழ அகதிகள் தொடர்ந்து கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டால் முகாம்களுக்கு வெளியே நடமாடுவதற்கு அவர்களுக்கு தடைவிதிக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும்—

முகாம்களில் உள்ள ஈழ அகதிகள் அனைவரினதும் கைரேகைகளைப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தமிழ் நாடு காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். (இ)

## மரண அறிவித்தல்கள்

### வல்லிபுரம் சத்துருசிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், ஆறுகால்மடம், பாடசாலை வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய பிரபல சாரதி வல்லிபுரம் சத்துருசிங்கம் அவர்கள் 20 - 06 - 93 அன்று காலை காலமானார். இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், திருமதி லீலாராணி சந்திரகுமார் (ஜேர்மனி), தர்மகுலசிங்கம், தனபாலசிங்கம் (சுவிஸ்), பாலநாதன் (சுவிஸ்), பாலச்சந்திரன் (பிரான்ஸ்), யாழி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் இருந்து இன்று (21 - 06 - 93) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
மகன்: ச. தருமகுலசிங்கம், (பெரியராசா)
சகலன்: க. பேரின்பநாதன்,
சகலன்: ச. விவேகானந்தன், (யாழ். மாநகராட்சி மன்றம்).

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை,
(26180)

### வேலுப்பிள்ளை தில்லையம்பலம்
(இளைப்பாறிய பாடசாலை அதிபர்)

இளவாலை சித்திரமேழியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தில்லையம்பலம் 20-6-93 (நேற்று) காலமானார். இவர் பொன்னுப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பதிகளின் மகனும், சிவானந்தராசா (நியூசிலாந்து), கமலானந்தம் (நோர்வே), சறோஜினிதேவி (நியூசிலாந்து), காலஞ்சென்ற ஜெயரஞ்சிதம் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநேசஜோதி [நியூசிலாந்து], ஜெயந்தி [நோர்வே], நித்தியானந்தராசா [நியூசிலாந்து] ஆகியோரின் மாமனும், பானுரதி, செல்வ அபிராமி ஆகியோரின் பேரனும், பொன்னம்பலம், அருளம்பலம், வீரலட்சுமி, தங்கப்பிள்ளை, காலஞ்சென்ற சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரரும், மாணிக்கம், குணரட்ணம், காலஞ்சென்ற பேரம்பலம், துரைசாமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று [21-6-93] திங்கள் காலை 11 மணிக்கு குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பொன்னுப்பிள்ளை (மனைவி)

கொக்குவில்.
26185)

### நாகநாதன் விசாலாட்சி

சிறுவிளானைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகநாதன் விசாலாட்சி நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற நாகநாதனின் அன்பு மனைவியும், நாகரட்டிணம் உதவி ஆணையாளர்-கலால் திணைக்களம் யாழ்ப்பாணம்) ராஜரட்டிணம் (சாலைமுகாமையாளர் வ.பி.போ.ச. மன்னார்) காலஞ்சென்ற சபாரட்டிணம், ராஜலட்சுமி, குக்குமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், புஸ்பராணி கௌரி மனோகரி, சந்திரராஜா கணக்குப்பதிவாளர், சீனிக்கூட்டுத்தாபனம் நாரஹேன்பிட்டிய) ஆகியோரின் மாமியாரும், கோபாலகிருஷ்ணன் ஸ்ரீஇராமகிருஷ்ணா - யாழ்ப்பாணம்) உதயகரன், திவஜா, ஜீவாகரன், ஜெயந்தன், திலீபன், கிஷாந்தன், ஹரிஜா, ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு ஆனைப்பந்தி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்,

தகவல்:
நா. நாகரட்டிணம் (மகன்)

383/26 நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.
(26188)

### தங்கராசா பரமேஸ்வரி

துன்மலை இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மானிப்பாய் லோட்டன் வீதியில் வசித்தவருமாகிய பரமேஸ்வரி காலமானார். அன்னார் குகனேசராசா, தவேந்திராதேவி, தயாளகுணதேவி சுவிஸ்), சிவனேசராசா (சுவிஸ்), உமாதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், புண்ணியலிங்கம், குகராஷசேகரம் (சுவிஸ்), சந்திரமோகன் (பிரான்ஸ்), தவமணிதேவி, கலாஜோதி (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், மகேஸ்வரி, மகாதேவன், இராசேஸ்வரி, தருமதேவன், குமாரதேவன், புவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அருமைச் சகோதரியும், யோகானந்தன், ஜீவானந்தன், கௌசல்யா, குருபரன், மிதிலாவி, சசிலா, கேமலா, சிரோனி, நிரோனி, திலீபன், பிரதீபன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லோட்டன் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இன்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்,

தகவல்:
கு. புண்ணியலிங்கம் (மருமகன்)

மானிப்பாய்.
[26189]

### அருளப்பு வெரோணிக்கா

அருளப்பு வெரோணிக்கா நேற்றிரவு காலமானார். இவர் அருளப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மிக்கேயில் தம்பதிகளின் மகளும், கொர்னேலியஸ் (சுகாதார மேற்பார்வையாளர், யாழ். மாநகர சபை), திருமதி நிர்மலா ஆகியோரின் தாயாரும், வேசுதாஸன், திருமதி யூலியற் ஆகியோரின் அன்பு மாமியாரும், விக்ரோரியாவின் சகோதரியும், விஜிதா, மேனகா, நெவின்ஸன், சர்மிலன், யூடி ஆகியோரின் பேர்த்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று [21 - 06 - 93) திங்கள் பிற்பகல் 3 மணிக்கு புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. கொர்னேலியஸ்

கொழும்புத்துறை. [26190]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 193/? இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 21 - 06 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org